பக்கங்கள் 18

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 தை 12 வெள்ளிக்கிழமை 26.01.2024 அதிர்வு 179

## ஜனாதிபதித் தேர்தல் ஒத்திவைக்கப்படாது!

### உரிய தினத்தில் நடத்தப்படும் என தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

ஜனாதிபதித் தேர்தல் உரிய தினத்தில் நடத்தப்படும் என்று தேர்தல்கள் ஆணைக் குழுவின் பணிப்பாளர் நாயகம்

04



# டி.ரி.என்.ஏ. இல் சேர வேண்டும் தமிழரசுக் கட்சி

## சிறீதரனுக்கு வழிகாட்டுகின்றார் சுரேஷ்

(எஸ்.நிதர்ஷன்)


"புதிய புதிய அமைப்புகள் தொடர்பாகச் சிந்திப்பதை விடுத்து, ஏற்கனவே செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற ஐக்கிய முன்னணியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஏனைய கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும் என்று விரும்புகின்றோம்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவாகியிருக்கும் சிவஞானம் சிறீதரனை வாழ்த்தி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் அதன் பேச்சாளர் சுரேஷ் க. பிரேமச்சந்திரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

04







# கொழும்பில் கோலாகலமாகக் கொண்டாடப்பட்ட இந்தியாவின் 75 ஆவது குடியரசுத் தின நிகழ்வு

இந்தியாவின் 75 ஆவது குடியரசுத் தினம் இந்திய உயர் ஸ்தானிகராலயத்தால் கொழும்பில் இன்று கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

இந்திய உயர் ஸ்தானிகரின் வாசஸ்தலமான இந்தியன் இல்லத்தில் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா இந்தியத் தேசியக் கொடியை ஏற்றி வைத்து அணிவகுப்பு மரியாதையையும் பார்வையிட்டார்.

இந்தியக் குடியரசுத் தலைவரின் குடியரசு தின உரையின் குறிப்புகளும் உயர்ஸ்தானிகரால் இந்தச் சந்தர்ப்பத்தில் வாசிக்கப்பட்டது.

தொடர்ந்து, இலங்கை கடற்படையினரின் இசை குழுவினரால் பாடல்கள் இசைக்கப்பட்டதுடன் உயர்ஸ்தானிகராலயத்தின் கலாசாரப் பிரிவான சுவாமி விவேகானந்தா கலாசார நிலையம் ஒழுங்கமைத்திருந்த கலாசார நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்தியாவின் செழிப்புமிக்க பன்முகத்தன்மையானது பல்வேறு நாட்டுப்புற நடன வடிவங்களை

04

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally




# ஊடக அடக்குமுறைகளுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் இன்று போராட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

ஊடக அடக்குமுறைகள் மற்றும் கருத்து வெளிப்பாட்டு சுதந்திரத்துக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டித்து யாழ்ப்பாணத்தில் இன்று போராட்டம் நடைபெற்றது.

யாழ். ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் யாழ்.பொது நூலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணி யாழ். மத்திய பஸ் நிலையம் வரை சென்று அங்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம் உள்ளிட்ட தென்னிலங்கை ஊடக அமைப்புக்களின் பங்கேற்புடன் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் சிவில் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரசியல்வாதிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டனர்.



















### மாவீரர் துயிலும் இல்லம் சென்ற தமிழரசின் புதிய தலைவர்

# சிறீதரனுக்கு எதிராக வீரசேகர போர்க்கொடி

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கிளிநொச்சியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று விடுதலைப்புலிகளை நினைவுகூர்ந்தமை அரசமைப்பை மீறும் செயலாகும் என்று பொங்கி எழுந்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.

அத்துடன், நாட்டைப் பிளவுபடுத்த மாட்டோம் என்ற உறுதிமொழியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களிடம் மீண்டும் பெற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சரத் வீரசேகர மேலும் கூறியவை வருமாறு:-

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், உடனே கிளிநொச்சியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று, மரணித்த விடுதலைப் புலிகளுக்கு மலர் தூவி நினைவேந்தல் நடத்தியுள்ளார்.

இந்த நாட்டைப் பிளவுபடுத்தவே விடுதலைப்புலிகள் போராடினர். எனவே, சிறீதரன் எம்.பி. அந்தப் பயங்கரவாதிகள் மரணித்த இடத்துக்குச் சென்று மலர் வைத்து நினைவேந்தல் நடத்துகின்றார் எனில் அவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நாட்டைப் பிளவுபடுத்தும் நிலைப்பாட்டிலேயே உள்ளனர் என்பதையே புலப்படுத்துகின்றது.

நாட்டைப் பிளவுபடுத்தும் வகையிலான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கமாட்டோம் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் சத்தியப்பிரமாணம் செய்துள்ளனர். நிலைமை இவ்வாறு இருக்கையில் சிறீதரன் எம்.பி., எவ்வாறு மாவீரர் துயிலும் இல்லத்துக்குச் சென்று, விடுதலைப்புலிகளைக் கௌரவித்து நினைவேந்தல் நடத்த முடியும்?

நாட்டைப் பிளவுபடுத்தும் நிலைப்பாட்டில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் உள்ளனர். எனவே, நாட்டைப் பிளவுபடுத்தமாட்டோம் என்ற உறுதிமொழியை அவர்களிடம் மீளப் பெற வேண்டும்.” – என்றார்.

# சஜித் கூட்டணியில் டலஸும் இணைவு?





“நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெருமவைத் தனிமைப்படுத்தவில்லை. அவரும் விரைவில் எமது கூட்டணியில் இணைவார்.” – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

“ஐக்கிய மக்கள் சக்தி நடத்திய கருத்துக் கணிப்பில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸவே முன்னிலையில் உள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, சுதந்திர மக்கள் சபை என்பவற்றில் இருந்து உறுப்பினர்கள் எம்முடன் நேரடியாக இணையவுள்ளனர். அடுத்து வரும் நாட்களில் இதற்கான நடவடிக்கை இடம்பெறவுள்ளது.

அத்துடன், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் உள்ள ஊழல் மோசடியுடன் தொடர்புபடாதவர்களும் வரலாம். எந்தவொரு உறுப்பினரையும் நாம் பேரம் பேசி விலைக்கு வாங்குவதில்லை. கொள்கை அடிப்படையிலான பயணமே தொடர்கின்றது.” – என்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## டி.ரி.என்.ஏ.இல்

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகப் பதவியேற்றதன் பின்னர் சிவஞானம் சிறீதரன் ஐக்கியத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்திருப்பதை வரவேற்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாகிய நாம், இலங்கைத் தமிழரசுக் கட்சியும் எம்முடன் இணைந்து பயணிக்க முன்வரவேண்டும் என்றும் வேண்டுகின்றோம்.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிவஞானம் சிறீதரனுக்கு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றது. தந்தை செல்வாவால் ஆரம்பிக்கப்பட்டு, இராஜவரோதயம், இராசமாணிக்கம், வன்னியசிங்கம், நாகநாதன், அமிர்தலிங்கம் போன்றோரால் தலைமை தாங்கப்பட்டு, தமிழ் மக்களுக்காகப் பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்த பாரம்பரிய மிக்க ஒரு கட்சியின் தலைவராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றீர்கள்.

தமிழரசுக் கட்சி தனித்து நின்று, தனது கோரிக்கைகளை வெல்ல முடியவில்லை என்ற காரணத்தால் இலங்கைத் தமிழரசுக் கட்சி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்றவை இணைந்து, தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பை உருவாக்கிய பாரம்பரியமும் தந்தை செல்வா தலைமையில் நடைபெற்றது.

இவ்வாறு தமிழ் மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்வதற்காக 1976ஆம் ஆண்டிலிருந்து தனது கட்சியான தமிழரசுக் கட்சியை முன்னிலைப்படுத்தாமல், தமிழர் விடுதலைக் கூட்டணி என்பதே தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் ஓர் ஐக்கிய முன்னணி என்பதை தந்தை செல்வா அடையாளம் காட்டினார்.

அதன் பின்னர், 1985ஆம் ஆண்டில் பூட்டான் நாட்டின் தலைநகரான திம்புவில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ விடுதலைப் புலிகள், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழப்புரட்சி அமைப்பு ஆகியோர் இணைந்து திம்பு கோட்பாடு எனப்படும் நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்தனர். அதுவே தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையின் தீர்வுக்கான அடைப்படையாகக் கொள்ளப்படுகின்றது.

2002ஆம் ஆண்டு தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழீழ விடுதலை இயக்கம், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஆகியவை இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் செயற்பட்டு வந்தனர். தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக விடுதலைப்புலிகள் ஆயுதப் போராளிகளாக செயற்பட்ட வேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனநாயக வழிமுறையில் தமிழ் மக்களுக்கான உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டத்தை முன்னெடுத்திருந்தது. இருவரும் ஒருவருக்கொருவர் அனுசரணையுடன் செயற்பட்டு வந்தார்கள்.

இரா.சம்பந்தனால் தலைமையேற்று நடாத்தப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் நிலவிய பல்வேறு முரண்பாடுகள் காரணமாக அதில் இணைந்திருந்த பல கட்சிகளும் தனிநபர்களும் வெளியேறியது மாத்திரமல்லாமல், இறுதியில் 2023ஆம் ஆண்டு நடைபெற இருந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல்களில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தாங்கள் தனித்துப் போட்டியிட வேண்டும் என்ற காரணத்திற்காக, அவர்களும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறினார்கள். அதன் காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயலிழந்துள்ளது.

இந்தநிலையில் ஈபிஆர்எல்எவ், ரெலோ, புளொட், தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் ஆகியோர் இணைந்து ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற ஒரு ஐக்கிய முன்னணியை அமைத்துள்ளோம். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான ஒரு யாப்போ அமைப்பு வடிவமோ இல்லாத காரணத்தால் கூட்டமைப்புக்குள் பல்வேறு முரண்பாடுகள் அவ்வப்போது தோற்றம் பெற்றன. இவற்றை நிவர்த்தி செய்யும்பொருட்டு, நாம் உருவாக்கிய ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்காக ஒரு யாப்பு வரையப்பட்டிருக்கின்றது. அது தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டும் இருக்கின்றது. இந்தக் கூட்டணிக்கென்று குத்துவிளக்கு சின்னமும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஐக்கிய முன்னணியில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கி, யாப்பின் அடிப்படையில் நிறைவேற்றுக் குழுவும் கட்சிக்கான கட்டமைப்பும் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் காலத்தின் தேவை கருதி, 2002ஆம் ஆண்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்ட போதும் அதனைப் பதிவு செய்ய வேண்டும் என்று அதில் அங்கம் வகித்த பல்வேறு கட்சிகள் தொடர்ந்தும் கோரிக்கைகளை வைத்தபோதும் தமிழரசுக் கட்சி அதற்குச் செவிசாய்க்கவில்லை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது 22 வருட காலமாக தமிழ் மக்களுக்காகப் போராடும் ஒரு அரசியல் கட்சியாகத் தன்னை நிறுவனப்படுத்திக்கொள்ளாமல், தேர்தல் காலங்களில் கூட்டாகவும் பின்னர் தமிழரசுக் கட்சியாகவும் முடிவெடுத்துச் செயற்படுவதுமே இன்றுவரை தொடர்கின்றது. இதன் காரணமாகவே இடைப்பட்ட காலங்களில் பல கட்சிகளும் அதிலிருந்து வெளியேறின.

இந்தநிலையில் தமிழரசுக் கட்சியின் தலைவராகப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் சிவஞானம் சிறீதரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறியோரை ஒன்றிணைத்து 2009ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்ற தனது விருப்பத்தை ஊடகங்கள் ஊடாக வெளிப்படுத்தியுள்ளார். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் ஐந்து கட்சிகளும் தமிழ்த் தேசியப் பரப்பிலுள்ள அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்து தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்காகப் போராடும் ஒரு வலுவான அமைப்பை உருவாக்க வேண்டும் என்பதில் தீர்க்கமான சிந்தனையுடன் பயணிக்கின்றது. இதன் அடிப்படையில்தான் ஒரு வருடத்துக்கு முன்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி உருவாக்கப்பட்டு, அது இன்றுவரை தொடர்ந்து செயற்பட்டு வருகின்றது.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில், புதிய புதிய அமைப்புகள் தொடர்பாகச் சிந்திப்பதை விடுத்து, ஏற்கனவே செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என்ற ஐக்கிய முன்னணியில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தமிழ்த் தேசியப் பரப்பில் செயற்பட்டுக்கொண்டிருக்கும் ஏனைய கட்சிகளும் இணைந்து செயற்பட வேண்டும் என்று விரும்புகின்றோம்." – என்றுள்ளது.

## கொழும்பில்...

அரங்கேற்றியிருந்த கலாசார நிகழ்வின் மூலமாக வெளிக்காண்பிக்கப்பட்டிருந்தது. இதில் குஜராத்தின் கர்பா நடனமும் உள்ளடங்குகின்றது.

யுனெஸ்கோ மனிதகுலத்தின் அருவமான கலாசார மரபுரிமை பட்டியலில் குஜராத்தின் கர்பா நடனம் மிகவும் அண்மையில் உள்வாங்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான இந்தியச் சமூகத்தினர் கலந்துகொண்டனர்.

முன்னதாக, உயிர் தியாகம்செய்த இந்திய அமைதி காக்கும் படையினருக்கு இந்திய அமைதி காக்கும் படையினரின் நினைவுத்தூபியில் உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா அஞ்சலி செலுத்தியிருந்தார்.

இன்று மாலை விசேட வரவேற்பு உபசாரம் ஒன்றும் இந்தியன் இல்லத்தில் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதில் இலங்கையிலுள்ள பல்வேறு துறைகளையும் சேர்ந்த பிரமுகர்களும் கலந்துகொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஜனாதிபதித் தேர்தல்...

சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்தார்.

அதேநேரம், ஜனாதிபதித் தேர்தலை ஒத்திவைப்பதற்கான எந்தவொரு சாத்தியக்கூறுகளும் இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

"ஜனாதிபதித் தேர்தலுக்கு 10 பில்லியன் ரூபாய் நிதி கோரப்பட்டுள்ளது. இந்தநிலையில், ஜனாதிபதித் தேர்தலானது எந்தவொரு சந்தரப்பத்திலும் பிற்போடப்படமாட்டாது" – என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் மேலும் கூறினார்.

தென்னிலங்கை தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.




# யாழ்ப்பாணத்தில் இந்தியாவின் 75 ஆவது குடியரசுத் தின நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

இந்தியாவின் 75 ஆவது குடியரசுத் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவராலயத்தில் இன்று நடைபெற்றது.

இந்திய எல்லைப் படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் யாழ். இந்தியத் துணைத் தூதுவர் அழைத்து வரப்பட்டு, இந்தியத் தேசிய கொடி ஏற்றலுடன் நிகழ்வு ஆரம்பமானது.

இதில் இந்தியக் குடியரசுத் தலைவரின் சிறப்புரையை யாழ். இந்தியத் துணைத் தலைவர் ராகேஷ் நடராஜ் ஜெயபாஸ்கரன் வாசித்தார். அத்துடன் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் யாழ். இந்தியத் துணை தூதுவராலய அதிகாரிகள், இந்தியப் பிரஜைகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.












# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## ஐக்கியத்தின் சீத்துவம்...!

கிடைக்கும் வாய்ப்பைச் சாதகமாகப் பயன்படுத்துவதுதான் அரசியல். பதவிகளைப் பெறுவதற்காக சாதகமாகப் பயன்படுத்துவது அல்ல. தன்னைச் சார்ந்த மக்களின் நலன்களை ஈட்டுவதற்காக வாய்ப்பை பயன்படுத்துவதுதான் முக்கியம்.

அது இப்போது நடப்பதாக இல்லை.

வெற்றுக் கோஷங்களுக்காக - பகட்டு வேஷங்களுக்காக - எல்லாமே நடைபெறுகின்றன.

இமாலய இலக்குகளைக் குறி வைத்துப் பிரசாரப் பீரங்கிகளாக முரசறைவதில் அர்த்தம் இல்லை. அதை எட்டுவதற்கான தெளிவான - உருப்படியான - காரிய சாத்தியமான - தீர்க்கதரிசனமான - வழி வரைபடம் அவசியம்.

கொள்கை - கோட்பாட்டில் உச்சமாக நிற்கும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை தமிழ் மக்கள் அங்கீகரிக்காமல் நிற்பதற்கு வழி வரைபடம் இன்மையே பிரதான காரணம். அந்த விடயத்தில் வெறும் கோட்பாடு குறித்துப் பேசிக்கொண்டு, அதை அடைவதற்குரிய காரிய சாத்தியமான வழி வரைபடமும் இல்லாமல், அதற்கான முழுப் பாதைகளையும் அடைக்கும் வெற்றுக் கோட்பாடுகளையே கொள்கையாக வரித்துக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை.

இந்த விடயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் மற்றொரு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக மாறிவிடாமல் இருப்பதை உறுதிப்படுத்துவது நாளை மறுதினம் முதல் அதன் தலைமைப் பதவியைப் பொறுப்பேற்கப் போகின்ற யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனின் பொறுப்பு.

அவரின் தேசியப் பற்று இருக்கட்டும். அது மெச்சத்தக்கதுதான். அந்தப் பற்று மட்டுமே இனத்தைக் காப்பாற்றி விடாது. அந்தப் பற்றைப் பற்றிக் கொண்டு நின்று தமிழர் தாயகத்தைக் காப்பாற்ற முடியாமல் போனால் அந்தப் பற்றினால் பயனும் இல்லை.

நாட்டின் தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்காதபடியால்தான் நாடு இப்படிப் பொருளாதார ரீதியில் பேரடி வாங்கும் நிலைமை ஏற்பட்டது என்று தமிழர்களாகிய நாம் மிதப்புடன் பேசிக் கொண்டிருக்கின்றோம். ஆகையினால் தேசிய இனப் பிரச்சினையை முதலில் தீருங்கள், நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்ந்து விடும் என்று தமிழர்கள் தரப்பாகிய நாங்கள் தத்துவம் பேசிக் கொண்டிருக்கிறோம்.

அது உண்மையாகவும் இருக்கலாம். தவறாகவும் இருக்கலாம்.

தென்னிலங்கை சிங்களம் இந்த இரண்டையும் ஏற்றுக் கொள்ளவதாகத் தெரியவில்லை. தேசிய இனப் பிரச்சினையைத் தீர்க்காதமைதான் இந்தப் பொருளாதார சீரழிவு நிலைமை ஏற்படக் காரணம் என்பதையோ, இனப்பிரச்சினையைத் தீர்த்தால்தான் பொருளாதாரப் பிரச்சினை தீரும் என்பதையோ சிங்களம் ஏற்பதாக இல்லை.

பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட போது, அதைத் தீர்ப்பதற்கான ஒரு மார்க்கமாக புலம்பெயர் தமிழர்களின் பங்களிப்பை கோரும் எண்ணப்பாங்கு சிங்களத்திடம் இருந்தது என்பது உண்மைதான். அதற்காக சில, பல தொடர்பாடல்கள் நடந்தமை கூட நிஜம்தான். ஆனால் தமிழ்த் தேசியம் பேசிய தமிழர் தரப்பு அது விடயத்தில் ஆக்கபூர்வமான முன் நகர்வு எதையும் மேற்கொள்ளவில்லை. அந்த வாசல் கதவை வழி மேல் விழி வைத்துப் பார்த்திருப்பதை விட்டுவிட்டு, வேறு வழி வகைகளை கொழும்பு நாடிவிட்டது. வேறு கதவுகளை அது தட்டித் திறந்து காரியம் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

இப்போது பொருளாதார மீட்சியை நோக்கிய திசையில் நாடு ஆக்கபூர்வமாக நகர்ந்து கொண்டிருக்கின்றது, இன்னும் ஓரிரு வருடங்கள் பல்லைக் கடித்துக் கொண்டு நெருக்கடியை எதிர்கொண்டபடி முன் நகர்ந்தால் பொருளாதார வீழ்ச்சியிலிருந்து நிரந்தரமாக நிமிர்ந்து விடலாம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறி வருகின்றார்.

அது ஓரளவுக்கு உண்மையாகவும் இருக்கக்கூடும். அப்படிப் பொருளாதார நெருக்கடியில் இருந்து, தமிழர் தரப்பின் பிரதான பங்களிப்பின்றி, கொழும்பு அரசு மீண்டால் அதன் பின்னர் நிலைமை என்ன? அது தமிழர்களைப் பொறுத்தவரை மிக மிக ஆபத்தான நிலைமை.

தமிழருக்கு ஒரு தேசிய இனப் பிரச்சினை இருக்கின்றது என்பதையே சிங்களம் அடியோடு மறந்து நிராகரித்து விடும். பிரச்சினையே இல்லாத இடத்தில் தீர்வு என்ற பேச்சு எதற்கென்று எனும் நிலைமை உருவாகிவிடும்.

அத்தகைய நிலைமை ஏற்பட முன்னர் தீர்வுக்கான பாதையை - மார்க்கத்தை - அடையாளம் கண்டு நகர்வது முக்கியம்.

தமிழரசு கட்சியின் புதிய தலைவராகத் தேர்வாகியிருக்கும் சிறீதரன் எம்.பி. கூறுவது போல தமிழர்கள் தரப்பின் ஐக்கியம் அதற்கு முக்கியம். ஆனால் தமிழ்த் தேசிய கட்சிகளின் ஐக்கியத்துக்கு முன்னர் அதற்கான அழைப்பு விடுக்கும் சிறீதரன் எம்.பி. தனது கட்சியின் ஐக்கியத்தை முன்னெடுக்க வேண்டும்.

அவரது கட்சியில் ஐக்கியத்தை முன்னெடுக்கும் அவரது சீத்துவம் நாளை கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவில் அம்பலமாகி விடும்.

# அரச அதிகாரிகளில் பலர் எந்த வேலையும் செய்வதில்லை

## ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு



"அரச அதிகாரிகளில் பலர் சம்பளம், கொடுப்பனவுகள், சலுகைகள் மற்றும் வசதிகளை பெற்றுக்கொண்டு எந்த வேலையும் செய்யாமல் இருகின்றனர்."

– இவ்வாறு முன்னாள் நிதிய மைச்சரும், ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட உறுப்பினருமான ரவி கருணாநாயக்க குற்றச்சாட்டு முன் வைத்துள்ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விட யத்தை குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நாட்டில் 17 இலட்சம் அரச அதிகாரிகள் உள்ளனர். ஒரு நாட்டிற்கு இவ்வளவு பெரிய பொது சேவை தேவையா?

இந்த அரசாங்க அதிகாரிகளின் சம்பளம், கொடுப்பனவுகள், சலுகைகள் மற்றும் வசதிகளுக்காக இந்த நாட்டில் உள்ள ஒவ்வொருவரும் பெரும் தொகையை வரியாக செலுத்த வேண்டும்.

கண்டிப்பாக பொதுப்பணித்துறையில் பணிபுரிகிறார்கள். உண்மைதான். ஆனால் பெரும்பான்மையானவர்கள் அந்த சம்பளம், கொடுப்பனவுகள், சலுகைகள் மற்றும் வசதிகளை பெற்றுக்கொண்டு எந்த வேலையும் செய்யாமல் உள்ளனர்.

அரச அதிகாரிகளுக்கு பொறுப்பு இருக்கிறது. ஆனால் அந்த பொறுப் புகளை நிறைவேற்றுகிறார்களா?

உதாரணமாக, மூளைச்சாவுகளை நிறுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங் கவின் தலைமை அமைச்சரவை, வைத்தியர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்தினரின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கு மிகவும் தூரநோக்குடன் கூடிய தீர்மா னத்தை எடுத்தது.

ஆனால் அந்த முடிவை நடை முறைப்படுத்தாமல் அரச அதிகாரிகள் இழுத்தடித்து வருகின்றனர். என்ன தந்திரம் இது என வினவியுள்ளார்.

அத்துடன் நாட்டின் ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை எடுக்கும் தீர்மா னங்களை அரச அதிகாரிகளால் நடைமுறைப்படுத்த முடியாது என கேள்வி எழுப்பிய அவர், அவை பயங்கரவாதம் என்பது தெளிவா கின்றது." – என்றார்.

## மின்சார கட்டண திருத்தம்:

# பொதுமக்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் செயற்பாடு நிறைவு

மின்சார கட்டண திருத்தம் தொடர்பில் பொதுமக்கள் கருத்துக்களை பெற்றுக் கொள்ளும் செயற்பாடு இன்றுடன் நிறை வடையவுள்ளதாக பொதுப் பயன்பாடு கள் ஆணைக்குழு தெரி வித்துள்ளது.

மின்சார விநியோக செலவு அதி கரித்துள்ளமை உள்ளிட்ட சில விட யங்கள் தொடர்பில், எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு இலங்கை மின்சார சபையிடம் கோரியுள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் மஞ்சுள பெர்ணான்டோ தெரி வித்துள்ளார்.

இதேவேளை, பெப்ரவரி மாதத்தின் நடுப்பகுதியில் மின்சார கட்டண திருத் தத்தை மேற்கொள்ள எதிர்பார்க் கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

# கறுவா அபிவிருத்தித் திணைக்களத்தை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி!

கறுவா அபிவிருத்தித் திணைக்களம் எனும் பெயரில் புதிய திணைக்கள மொன்றை நிறுவுவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

தற்போது ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் கீழ் இயங்கி வரு கின்ற தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தை புதிதாக தாபிக் கப்பட்டுள்ள கறுவா திணைக்களத்திற்கு ஒப்படைத்தல் பொருத்தமானது என கண்டறியப்பட்டுள்ளது.

அதற்கமைய, தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தின் அனைத்து சொத்துக்கள் மற்றும் தேசிய கறுவா ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலையத்தால் தற்போது நடை முறைப்படுத்தப்பட்டு வரும் அனைத்துப் பணிகளையும் கறுவா அபிவிருத்தித் திணைக்களத்திற்கு ஒப்படைப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது.

விவசாய மற்றும் பெருந்தோட்டத் துறை அமைச்சர் சமர்ப்பித்த குறித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகா ரம் வழங்கியுள்ளது.




# மன்னார் தீவை முற்றாக அழிப்பதற்கு முயற்சி: மக்களால் கவனவீர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு

(மன்னார் நிருபர் )

மன்னார் மாவட்ட மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைளுக்கு உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இன்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

மன்னார் பிரஜைகள் குழு ஏற்பாடு செய்த இந்த கவனவீர்ப்பு போராட்டம் இன்று காலை 10 மணியளவில் இடம் பெற்றது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மார்க்கஸ் அடிகளார் தலைமையில் இடம்பெற்ற விழிப்புணர்வு பேரணியின் போது, நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், மத தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், பொது மக்கள் என பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

மன்னார் பிரதான பாலத்தடி இல் இருந்து ஆரம்பமான விழிப்புணர்வு பேரணி, பிரதான வீதியூடாக சென்று மன்னார் பஜார் பகுதியை சென்றடைந்தது. பின்னர் மன்னார் மாவட்டச் செயலகம் முன் ஒன்று கூடிய மக்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு தமது கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதன் போது மன்னார் தீவில் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் விடயங்களை மக்கள் முன் வைத்தனர்.

மன்னார் மாவட்டத்தில் அரச படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளை மீள மக்களிடம் கையளிப்பதோடு பொதுவான காணிகளும் விடுவிக்கப்பட வேண்டும். அத்தோடு அவர்களின் அமைதியான வாழ்விற்கு வழி வகுத்தல், பல அரச காணிகள் தவறான செயற்பாடுகளினால் மக்களின் வளர்ச்சியினை பாதிக்க கூடியதாக ஒரு சிலர் தமதாக்கி உள்ளனர் என குற்றம் சாட்டியுள்ளனர்.

மேலும், வேறு மாவட்ட அரசியல் வாதிகள் மற்றும் அரசியல் முகவர்கள் மன்னாரில் உள்ள மக்களினதும், பொதுக் காணிகளையும் வாங்கி தம தாக்கிக் கொள்கின்றனர்.

இதனால் வருங் காலத்தில் மக்களுக்கும்,அவர்களுடைய சந்ததியினருக்கும் ஏற்படவிருக்கும் அபாயம் தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும் குறிப்பாக தலைமன்னார் துறை காணி, நாயாற்று வெளி காணி, பேசாலை பகுதிகளில் இந்த பிரச்சினை காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளனர்.

அபிவிருத்தி என்ற போர்வையில் மக்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய காணிகள் அபகரிக்கப்பட்டு சொந்த தேவைக்காக பயன் படுத்தப்படுவதால் இதை தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும், மன்னார் தீவில் அரச மற்றும் தனிப்பட்ட முகவர்களால் 4,500 இற்கும் மேல் துளைகள் 50 அடிக்கு கீழ் இடப்பட்டு கனிய மணல் அகழ்வு இதுவரை செய்து முடிக்கப்பட்டுள்ளது.

இதில் எடுக்கப்பட்ட மண்கள் பரிசோதிக்கப்பட்டன. மன்னார் தீவில் அனைத்து பிரதேசங்களிலும் கனிய மணல் அகழ்வு பரிசோதனை செய்யப்பட்டுள்ளது. கனிய மண் அகழ்வினால் நிலமேற்பரப்பு மிகவும் இறுகமற்று போகிறது.

தற்போது மன்னார் தீவின் 63 சதவீத நிலப்பரப்புகள் கடல் மட்டத்தின் கீழ் உள்ளது. இக்கனிய மண் அகழ்வு தொடருமானால் காலநிலை காரணமாக மன்னார் தீவு முற்று முழுதாக நீரில் மூழ்கும் அபாய நிலை காணப்படுவதால் இக் கனிய மணல் அகழ்வு உடன் தடைசெய்யப்பட வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை மக்கள் இதன்போது முன்வைத்தனர்.

போராட்டத்தின் முடிவில் ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பும் வகையில் மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.









# நாம் இன்னும் சுதந்திரமான காற்றை சுவாசிக்க முடியாத கட்டத்தில் இருக்கிறோம்

## தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறிதரன் தெரிவிப்பு

(மன்னார் நிருபர் )

"இந்த மண்ணிலே நாம் பல உயிர்களை தியாகம் செய்திருந்தும் சுதந்திரமான காற்றை சுவாசிக்க முடியாத கட்டத்தில் இருக்கிறோம். தமிழ் மக்கள் பெற்ற துன்பங்களை சிங்கள மக்கள் அனுபவிக்க தொடங்கி விட்டனர். இதனால் அரசு அச்சத்தில் மூழ்கியுள்ளது. இதுவும் தமிழர்களுக்கான பாதை திறக்க வழியாகும். ஆகவே நாம் எல்லோரும் இணைந்து ஒருமிக்க வேண்டிய காலகட்டம்,"

– இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக எஸ். சிறிதரன் கடந்த 21 ஆம் திகதி தெரிவு செய்யப்பட்டதை தொடர்ந்து மன்னார் மாவட்ட தமிழரசுக் கட்சி உறுப்பினர்களினால் வரவேற்பு நிகழ்வு நடத்தப்பட்டது. .

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மனிதர்களுடைய வாழ்விலே பிறப்பிலிருந்து இறப்பு வரை எவ்வளவோ நிகழ்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறே தமிழர்களுடைய வாழ்வும் பல அடையாளங்களோடும் எதிர்பார்ப்புகளோடும் கடந்து சென்று கொண்டிருக்கின்றது. இந்த நேரத்தில் மன்னார் மக்களுடன் நான் உரையாடுவது எனது வரலாற்றில் ஒரு பதிவாகின்றது.

என்னுடைய தெரிவுக்கு மன்னார் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கு நன்றியுடனும் அத்துடன் உங்களோடு நம்பிக்கையுடன் பயணிக்க இருக்கின்றேன்.

இந்த மண்ணிலே நாம் பல உயிர்களை தியாகம் செய்திருந்தும் சுதந்திரமான காற்றை சுவாசிக்க முடியாத கட்டத்தில் இருக்கிறோம். நாம் இன்னும் அந்நியப்படுத்தப்பட்டிருக்கின்றோம்.

நாம் 75 ஆண்டுகளுக்கு மேலாக போராடி வரும் ஒரு இனமாக நாம் இருக்கின்றோம். 1949 ஆம் ஆண்டு தந்தை செல்வா தமிழர் ஒரு தேசிய இனம் என கூறினார். அவர் இழந்து போன இறைமையை மீட்டு எடுத்து எமது தேசிய அடையாளத்தோடு வாழ வேண்டும் என செயல்பட ஆரம்பித்தார்.






எதிர்வரும் நான்கு ஆண்டுகளுக்குள் உலகம் முழுவதும் பாரிய மாற்றங்கள் இடம்பெற இருக்கின்றன. இன்று உலகத்தில் நிகழ்கின்ற சண்டைகள் அரசியல் நிகழ்வில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

மேலும், தமிழர்களின் தேசிய அபிலாசைகளை உலகம் புதிய பரிமாணத்துடன் சிந்திக்க முற்பட்டுள்ளது. நாம் இழந்த ஆன்மாக்கள் இப்பொழுது எமக்கு உத்வேகத்தை தருகிறது.

நாம் எந்த நோக்கத்திற்காக எமது உறவுகளின் உயிர்களை இழந்தோமோ அந்த நோக்கங்கள் இன்னும் அழிந்து போகவில்லை.

நாம் பல சவால்களை சந்தித்து இன்னும் மனிதர்களாக இருக்கிறோம் என்றால் நாம் அறத்தின் மீதும் தர்மத்தின் மீது பற்றுக்கொண்டவர்களாக இருக்கின்றோம்.

இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு செய்தியை கூறுகின்றேன். தமிழர்களுக்கு வெளிச்சமான பாதை தொடங்கியுள்ளது. ஆகவே நாம் ஒருமித்த கரங்களாக இணைந்து கொள்வோம்.

நமக்கு இந்த நாடு நிம்மதியான அமைதியை தருமா? என்ற கேள்வியை மீண்டும் கேட்டு நிற்கின்றோம். இலங்கை அரசு தமிழர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காவிடில் இந்த நாடு பெரும் பாதாளத்துக்குள் விழும் என்பது ஐயம் இல்லை.

நாம் பெற்ற துன்பங்களை சிங்கள மக்கள் அனுபவிக்க தொடங்கி விட்டனர். இதனால் அரசு பயத்தில் மூழ்கியுள்ளது. இதுவும் தமிழர்களுக்கான பாதை திறக்க வழியாகும்.

ஆகவே நாம் எல்லோரும் இணைந்து ஒருமிக்க வேண்டிய காலகட்டம் இது." – என்றார்.



# சனத் நிஷாந்தவின் உடலுக்கு இன்று சொந்த ஊரில் அஞ்சலி

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மறைந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் உடல் புத்தளத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு எடுத்துச் செல லப்பட்டுள்ளது.

பொது அஞ்சலிக்காக நேற்று பிற்பகல் முதல் பொரளையில் உள்ள தனியார் மலர்ச்சாலையில் சனத் நிஷாந்தவின் உடல் வைக்கப்பட்டி ருந்தது.

இதன் போது, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் சபா நாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன ஆகியோர் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

அத்துடன், முன்னாள் முதல் பெண் மணி ஷிரந்தி ராஜபக்ஷ, எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட பல அரசியல்வாதிகளும் மறைந்த சனத் நிஷாந்தவுக்கு இறுதி அஞ்சலியை செலுத்தியுள்ளனர்.

இந்த நிலையில், இன்று மதியம் 12.00 மணியளவில் மறைந்த இரா ஜாங்க அமைச்சரின் சொந்த ஊரான ஆராச்சிக்கட்டுவ பிரதேசத்திற்கு தற் போது அவரது உடல் எடுத்துச் செல லப்பட்டுள்ளது.

இதன்படி, எதிர்வரும் 28 ஆம் திகதி அவரது இறுதிச் சடங்குகள் இடம்பெற வுள்ளன.

# நாடாளுமன்ற கூட்டத் தொடர் இன்று நள்ளிரவுடன் நிறைவு

நாடாளுமன்ற கூட்டத் தொடர் இன்று நள்ளிரவுடன் நிறைவு செய்யப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி மீண்டும் புதிய கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

நாடாளுமன்ற கூட்டத்தொடர் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர், அரசாங்க கணக்குகள் பற்றிய குழு உள்ளிட்ட பல நாடாளுமன்ற குழுக்கள் கலைக்கப்படும்.

புதிய கூட்டத் தொடரின் பின்னர், ஜனாதிபதியினால் அதற்கான உறுப்பினர் நியமனம் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிவனொளிபாதமலை யாத்திரிகர்களுக்காக விசேட அரச பஸ் சேவை ஏற்பாடு

சிவனொளிபாதமலைக்கு செல்லும் யாத்திரிகர்களுக்காக பலாங் கொடையில் இருந்து நல்லதண்ணி வரை விசேட அரச பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

பலாங்கொடை போக்குவரத்து சபை முகாமையாளர் தர்ம ஸ்ரீ ஹரிச்சந்திர இதனை தெரிவித்துள்ளார்.

இதன்படி, ஒவ்வொரு வெள்ளிக் கிழமைகளிலும் இந்த விசேட பஸ், சேவையில் ஈடுபடுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.



ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலை 4.30 மணிக்கு பலாங்கொடை யில் இருந்து புறப்படும் பஸ் பொக வந்தலாவ வீதியின் ஊடக நோர்வூட் பிரதான நகரத்தை தொடர்ந்து ரவு 8 மணிக்கு நல்லதண்ணியை சென்ற டையும் என பலாங்கொடை போக்கு வரத்து சபை முகாமையாளர் தர்ம ஸ்ரீ ஹரிச்சந்திர தெரிவித்துள் ளார்.

# இந்தியாவின் உதவிகள் தொடரும்: ஜீவன் குடியரசு தினம் வாழ்த்து செய்தி

எல்லா வழிகளிலும் உதவிவரும் இந்தியாவின் உதவி தொடரும் என உறுதியாக நம்புகின்றேன் என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 75 ஆவது குடியரசு தினம் இன்று கொண்டாடப்படுகின்றது. இதனை முன்னிட்டு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது வாழ்த்து செய்தியில் மேலும் குறிப்பிடுகையில்,

“ஒட்டு மொத்த உலகுக்குமே அகிம்சையை போதித்த நாடுதான் பாரத தேசமாகும். ஜனநாயகத்தின் இருப்பிடமாகவும் அந்நாடு கருதப்படுகின்றது. இன்று உலகில் பலமான பொருளாதாரத்தை கொண்டுள்ள நாடுகளின் பட்டியலிலும் இணைந்துள்ளது.



அதுமட்டுமல்ல தொழில்நுட்ப துறையிலும் வேகமாக முன்னேறி வருகின்றது. நிலவின் தென்துருவத்தில் கால்பதித்த முதல் நாடு என்ற பெருமையுடன் இந்தியா இன்று குடியரசு தினத்தைக் கொண்டாடுகின்றது. அனைத்து இந்திய மக்களுக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியா என்பது எமது தொப்புள் கொடி உறவு, இலங்கையில் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருந்த கால கட்டத்தில் முந்தியடித்துக்கொண்டு உதவி வழங்கிய நாடு. அதனை என்றும் மறக்கமாட்டோம்.

எமது மலையக பெருந்தோட்ட மக்களுக்கும் இந்தியா தொடர்ச்சியாக உதவிகளை வழங்கி வருகின்றது. அதனையும் இந்த நேரத்தில் நினைவுகூருகின்றேன். தெற்காசிய பிராந்தியத்தின் காவலாக விளங்கும் இந்தியா மென்மேலும் உயரவேண்டும்” என்று குறிப்பிட்டுள்ளார்.



# லிட்டில் பட் பாலர் பாடசாலையின் பட்டமளிப்பும் கலைவிழாவும்!

(பழுவூரான்)

மட்டக்களப்பு லிட்டில் பட் பாலர் பாடசாலையின் பட்டமளிப்பு மற்றும் கலை நிகழ்வானது பாலர் பாடசாலை அதிபர் திருமதி எம்.மிதுலா தலைமையில் தேவநாயகம் மண்டபத்தில் நேற்று இடம் பெற்றது.

இந்த நிகழ்வின் பிரதம அதிதியாக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி மகளிர், சிறுவர் விவகார சமூக வலுவூட்டல் அமைச்சின் முதன்மைப் பயிற்றுநர் முத்துராஜா புவிராஜா கலந்து கொண்டார்.

2024 ஆம் ஆண்டு பாடசாலை செல்லவுள்ள சிறார்கள் இதன் போது அதிதிகளினால் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

பாலர் பாடசாலை மாணவ, மாணவியரின் கண்கவர் நடனங்கள் மற்றும் கலை நிகழ்வுகள் இதன் போது அரங்கேற்றப்பட்டன.

இந்த நிகழ்வில், முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகத்தர் ரி.மேகராஜ், லிட்டில் பட் பாலர் பாடசாலையின் பணிப்பாளர் எஸ். முகாந்தன், எஸ்.பரணிதரன், வாகரை நிர்வாக உத்தியோகத்தர் வி.சிவராஜன் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# போரதீவுப்பற்று பிரதேச செயலக பாரம்பரிய பொங்கல் விழா

(திலக்ஸ் ரெட்ணம்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் பொங்கல் விழா இன்று மிக விமர்சையாக இடம்பெற்றது.

இந்த நிகழ்வு பிரதேச செயலாளர் சோ. ரங்கநாதன் தலைமையில், தும்பங்கேணி இளைஞர் விவசாயதிட்ட கிராமத்தில் உள்ள வெள்ளிமலைப் பிள்ளையார் ஆலயத்தில் இடம்பெற்றது.

பாரம்பரிய நெல் அறுவடை நிகழ்வுகளும், பாரம்பரிய இசைக் கருவிகளின் இன்னிசையுடன் கலாசார நடைபவனியும் நடைபெற்றது.

இந்த பிரதேசத்தில் உள்ள ஆலயங்களின் பொங்கல் மற்றும் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்கிடையிலான ஆக்கத்திறன் போட்டி என்பனவும் நடைபெற்றது.

பொங்கல் விழாவில் இளைஞர் விவசாயதிட்ட கிராம மக்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.











# மன்னார் பொது வைத்தியசாலையில் சிரமதானப் பணிகள் முன்னெடுப்பு

(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டச் செயலகமும், திணைக்கள உத்தியோகத்தர்களும் இணைந்து மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் பாரிய சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட பொது வைத்திய சாலையின் சுற்று சூழலால் டெங்கு அபாயம் காணப்படுவதாக பொது மக்கள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்துக்கு கொண்டு வந்திருந்தனர்.

இவற்றை கவனத்துக்கு எடுத்திருந்த மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மன்னார் பொது வைத்தியசாலையை நெரில் சென்று பார்வையிட்டார். பின்னர் இது தொடர்பாக மன்னார் மாவட்ட செயலகத்தில் திணைக்கள அதிகாரிகளுடன் விஷேட கலந்தரையாடல் ஒன்றை மேற்கொண் டிருந்தார். இதற்கமைவாகவே இந்த சிர மதானப்பணிமுன்னெடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபர் திரு க.கனகேஸ் வரன் தலைமையில் நடைபெற்ற இந்த சிரமதானப் பணியில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள், மன்னார் அனர்த்த முகாடைத்துவப் பிரிவு, மன்னார் பிரதேச செயலகம், மன்னார் நகரசபை, மன்னார் பிரதேச சபை பல்வேறு திணைக்கள உத்தி யோகத்தர்கள், பாதுகாப்பு படையினர், அரசசார்பற்ற நிறுவனங்களின் மற்றும் பொதுமக்களின் பங்குபற்றலில் இந்த சிரமதானப் பணி மிகவும் சிறப்பாக நடைபெற்றது.







# தைப்பூசத் திருவிழாவும் பால்குட பவனியும்

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்று பிரசித்தி பெற்ற உகந்தை மலை முருகன் ஆலய தைப்பூசத் திருவிழாவும் பால் குட பவனியும் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.














# சகோதரி பவதாரணியின் உடலைப்பார்க்க கொழும்பிற்கு வந்தார் யுவன் சங்கர் ராஜா

இசைஞானி இளையராஜாவின் மகளும் பாடகியுமான பவதாரணி இலங்கையில் நேற்று உயிரிழந்தார்.

இந்த நிலையில், அவரது சகோதரரும் இசையமைப்பாளருமான யுவன் சங்கர் ராஜா உள்ளிட்ட குழுவினர் இன்று காலை இலங்கைக்கு வருகைத் தந்தனர்.

பாடகி பவதாரணியின் உடல் வைக்கப்பட்டுள்ள கொழும்பில் உள்ள மலர் சாலைக்கு அவர் வருகைத் தந்துள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த பாடகி பவதாரணி கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்று வந்த நிலையில் சிகிச்சைப் பலனின்றி நேற்றையதினம் மாலை திடீரென உயிரிழந்தார்.

இந்த நிலையில், இசை நிகழ்ச்சிக்காக இலங்கைக்கு வருகைத் தந்திருந்த இசைஞானி இளையராஜா உடனடியாக கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலைக்கு விரைந்தார். அதன் பின்னர் பவதாரணியின் உடல் கொழும்பில் உள்ள மலர் சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மேலும், இசைஞானி இளையராஜாவின் மகனும் இசையமைப்பாளருமான யுவன் சங்கர் ராஜா உள்ளிட்ட குடும்பத்தினர் இன்று முற்பகல் கொழும்பு நோக்கி வருகைத் தந்துள்ளனர்.





# கல்வியியல் கல்லூரியில் தைப்பொங்கல் நிகழ்வு

**(வி.ரி. சகாதேவராஜா)**

அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியில் தைப்பொங்கல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

கல்லூரி பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி தலைமையில் இந்த நிகழ்வு மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.





## இந்தியாவின் 75 ஆவது குடியரசு தின விழா:

# டில்லியில் தேசியக் கொடியேற்றினார் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு

இந்தியாவின் 75 ஆவது குடியரசு தின விழா நாடு முழுவதும் உற்சாகமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. தலைநகர் டில்லியில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

21 பீரங்கி குண்டுகள் முழங்க குடியரசுத் தலைவரால் தேசியக் கொடியேற்றி மரியாதை செலுத்தப்பட்டது. தேசிய கீதம் இசைக்கப்பட்டது. பின்னர் கர்தவ்ய பாதையில் முப்படைகள் உள்ளிட்ட பல்வேறு படைப் பிரிவினரின் அணிவகுப்பை தொடங்கிவைத்த குடியரசுத் தலைவர் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

முன்னதாக, டில்லியில் போர் வீரர்கள் நினைவிடத்தில் பிரதமர் நரேந்திர மோடி அஞ்சலி செலுத்தினார். அவருடன் மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படை தளபதிகளும் அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் அங்கிருந்த குறிப்பேட்டில் பிரதமர் மோடி தனது அஞ்சலிக் குறிப்பினை பதிவிட்டார். தொடர்ந்து அங்கிருந்து குடியரசு தின விழா அணிவகுப்பு நடைபெறும் கர்தவ்ய பாதைக்கு சென்றார். பிரதமரைத் தொடர்ந்து குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தங்கர் அவரது மனைவியுடன் விழாவுக்கு வருகை தந்தார்.



75 ஆவது குடியரசு தின விழாவை முன்னிட்டு டில்லியில் நடைபெறும் சிறப்பு அணிவகுப்பில் தலைமை விருந்தினராக பங்கேற்க பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரானுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அவரை இன்று குடியரசு தின விழாவுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தன்னுடன் குதிரை வண்டியில் அழைத்து வந்தார். குதிரை வண்டியின் முன்னும் பின்பும் குதிரையில் வீரர்கள் அணிவகுத்து சென்றனர்.

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்முவையும், பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மேக்ரானையும் பிரதமர் மோடி, பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், முப்படைத் தளபதிகள் ஆகியோர் வரவேற்றனர். பின்னர் குடியரசுத் தலைவர் 21 குண்டுகள் முழங்க, தேசிய கீதம் இசைக்கப்பட தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.

அதன் பின்னர் கண்கவர் அணிவகுப்பு தொடங்கியது. குதிரைப் படை, பீரங்கிப் படை அணிவகுப்பு மரியாதையை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஏற்றார். அதன் பின்னர் மற்ற அணிவகுப்புகள் தொடங்கின. அந்த வரிசையில் பிரான்ஸ் நாட்டு இராணுவ வீரர்களின் அணிவகுப்பு அனைவரையும் வெகுவாகக் கவர்ந்தது.





# பா.ஜ.க. தற்காத்துக்கொள்ள மதத்தை கையில் எடுக்கிறது

## முதல்வர் ஸ்டாலின் விமர்சனம்

"பா.ஜ.க. தன்னைக் காப்பாற்றிக் கொள்ள மதத்தைக் கையில் எடுக்கிறது. நாம் இந்தியாவைக் காக்க பா.ஜ.கவின் தோல்விகளை, அவர்களின் தமிழ்மொழி விரோதப் போக்கை அம்பலப்படுத்துவோம். இண்டியா கூட்டணியின் வெற்றியில்தான் இந்தியாவின் எதிர்காலமே இருக்கிறது. இண்டியா கூட்டணியின் ஆட்சி உண்மையான கூட்டாட்சியாக அமையும்."

– இவ்வாறு மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் கூட்டத்தில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை அமைந்தகரையில் உள்ள செயின்ட் ஜார்ஜ் பள்ளி வளாகத்தில் தி.மு.க. சார்பில் 'மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள்' பொதுக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு முதல்வர் ஸ்டாலின் உரையாற்றுகையில்,

"பா.ஜ.க. ஆட்சிக்கு வந்ததில் இருந்து தமிழ்மொழியைப் புறக்கணித்து இந்தி மொழியைத் திணிக்கும் வேலையைச் செய்து கொண்டிருக்கிறது. நாமும் தொடர்ந்து எதிர்த்துக் கொண்டு இருக்கிறோம். கடந்த 9-9-2022 அன்று, அலுவல் மொழி தொடர்பான நாடாளுமன்றக் குழுத் தலைவரான அமித்ஷா குடியரசுத் தலைவரிடம் ஒரு



அறிக்கையை கொடுத்தார். அதில் தமிழ் உள்ளிட்ட மாநில மொழிகளுக்கும், அந்த மொழிகளைப் பேசும் மக்களின் நலனுக்கும் எதிரான பரிந்துரைகள் இருந்தது. உடனே ஒக்டோபர் 18 ஆம் திகதி இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் தமிழ்நாடு சட்டமன்றத்தில் அதைத் துணிச்சலாக எதிர்த்து தனித் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றி அந்தப் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று மத்திய அரசை வலியுறுத்தினோம்.

இந்தியாவை ஆளும் பா.ஜ.க. அரசானது இந்தி மொழியைத் திணிப்பதற்குக் காரணம், இந்தி பேசும் மக்களை ஏமாற்றுவதற்குத்தான். பா.ஜ.கவுக்கு அதிகம் வாக்களிப்பது யார்? வடமாநில மக்கள். குறைந்தபட்சம், இந்தி பேசும் வடமாநில மக்களுக்காவது எந்த நன்மையாவது செய்திருக்கிறார்களா? கொரோனா காலத்தில் திடீர் என்று ஊரடங்கு போடப்பட்டதால் தங்களின் சொந்த ஊருக்குத் திரும்புவதற்குக் கூட இந்தி பேசும் மக்களுக்குப் பேருந்து வசதியை ஏற்படுத்தித் தராமல், பல நூறு கிலோ மீற்றர் தூரம் மக்கள் நடந்து தங்களின் ஊருக்குப் போன கொடுமையைப் பார்த்து நாம் கண்ணீர் விட்டோம். பலர் தண்டவாளத்தில் நசுங்கி இறந்தார்கள். அப்படி என்றால், கொரோனாவை விடக் கொடியவர்கள் யார் என்றால் பா.ஜ.க. அரசுதான். சாரை சாரையாக நடந்து சென்ற இந்தி மக்களுக்கு நீங்கள் காட்டிய இரக்கம் இதுதானா? அந்த மக்களை, இப்போது ராமர் கோயிலைக் காண்பித்து திசை திருப்பப் பார்க்கிறார்கள்." –என்றார்.

# ரஷ்ய விமானம் விழுந்து நொறுங்கியது: சர்வதேச விசாரணை கோருகிறது உக்ரைன்





ரஷ்ய இராணுவ விமானம் விழுந்து நொறுங்கிய விவகாரம் தொடர்பான சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என உக்ரைன் வலியுறுத்தியுள்ளது.

நேற்று முன்தினம் ரஷ்யாவின் பெல்கராட் நகரில் இருந்து உக்ரைன் போர்க் கைதிகளை ஏற்றி வந்த விமானம் விழுந்து நொறுங்கியதில் 65 உக்ரைன் போர்க் கைதிகள் உள்பட 75 பேர் உயிரிழந்தனர் என கூறப்படுகிறது.

இது தொடர்பாக அந்த நாட்டு ஜனாதிபதி வோலோடிமிர் ஜெலென்ஸ்கி கூறுகையில்,

“அந்த விமானம் ஏன் விழுந்து நொறுங்கியது, அதில் இருந்தவர்கள் யார் என்பது குறித்து தெரிந்துகொள்வது அவசியம்.

உக்ரைனியர்களின் உயிருடன் விளையாடுவது ரஷ்யாவின் வழக்கமாகியுள்ளது, எனவே, இந்த விவகாரம் குறித்து சார்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும்.” – என்றார்.

முன்னதாக, 65 உக்ரைன் போர்க் கைதிகளை ஏற்றிக் கொண்டு தங்களுக்குச் சொந்தமான இல்யுஷின் எல் – 76 ரகத்தைச் சேர்ந்த விமானம் எல்லை நகரான பெல்கராட் வான் பகுதியில் நேற்று முன்தினம் சென்று கொண்டிருந்தபோது அது விழுந்து நொறுங்கியதாக ரஷ்ய இராணுவம் கூறியது.

உக்ரைன் தான் அந்த விமானத்தை சுட்டு வீழ்த்தியதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியது.

ரஷ்யாவுக்கும், உக்ரைனுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டுள்ள கைதிகள் பரிமாற்ற ஒப்பந்தத்தின் கீழ், உக்ரைன் போர்க் கைதிகளை விடுவித்து அந்த நாட்டிடம் ஒப்படைப்பதற்காக அவர்கள் அந்த விமானத்தில் அழைத்துச் சொல்லப்பட்டபோது அது சுட்டு வீழ்த்தப்பட்டதாக ரஷ்யா மேலும் கூறுகிறது.

எனினும், இந்தக் குற்றச்சாட்டை உக்ரைன் மறுத்து வருகிறது.

நேட்டோவில் உக்ரைன் இணைவது தங்கள் நாட்டு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ரஷ்யா கூறி வரும் நிலையில், அந்த இராணுவக் கூட்டமைப்பில் இணைய உக்ரைன் விருப்பம் தெரிவித்தது

அதனைத் தொடர்ந்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த 2022 பெப்ரவரி மாதம் படையெடுத்து, உக்ரைனின் கிழக்கு மற்றும் தெற்குப் பகுதியைச் சேர்ந்த 4 மாகாணங்களின் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியது.

அந்த மாகாணங்களில் எஞ்சிய பகுதிகளை கைப்பற்ற ரஷ்யாவும், இழந்த பகுதிகளை மீட்க உக்ரைனும் தொடர்ந்து போரிட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# செங்கடலில் நடத்தப்படும் தாக்குதல்கள் மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கும்

## ஐ.நா. எச்சரிக்கை

செங்கடலில் நடத்தப்படும் தாக்குதல்கள் மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கக் கூடும் என ஐ.நா. பொதுச் சபை தலைவர் டென்னிஸ் பிரான்சிஸ் எச்சரித்துள்ளார்.

செய்தி நிறுவனமொன்றுக்கு அளித்த சிறப்பு பேட்டியில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வளைகுடாவில் நடைபெற்றுவரும் போர் தொடர்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

செங்கடலில் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தொடங்கிய தாக்குதலுக்கு மூன்றாம் தரப்பினர் உதவுவது வெளியாகி உள்ளது.

இதனால் சூழல் மிகவும் மோசமாக மாறி வருகிறது. அதேபோல் காசா பிரச்சினைக்கு அமைதி வழியே தீர்வு.

இஸ்ரேல் – பலஸ்தீனம் என இரண்டும் தனிநாடுகளாக செயல்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் செங்கடலில் தொடர்ந்து நடத்தப்படும் தாக்குதல்கள் கவலையளிப்பதாகவும் இத்தாக்குதல் தொடார்ந்தால் மூன்றாம் உலகப் போருக்கு வழிவகுக்கக் கூடும் என்றும் ஐ.நா. பொதுச் சபை தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

